புதிய அவையம்

PUTHIYA AVAIYAM
(PEER – REVIEWED JOURNAL)
ISSN :2456-821X
Vol. 08, Issue 02, January 2025

# தொல்காப்பிய வெட்சித்திணை: இனக்குழுச்சமூகத்தின் எச்சமும் வேந்தர் சமூகத்தின் தோற்றமும்

**முனைவர் த. திருப்பதி**
உதவிப்பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

வெட்சியினை வேந்தன் மேவும் தொழிலாகக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம். வெட்சித்திணையினை இனக்குழுச்சமூகத்தின் தனித்த பண்பாடாகக் கொள்ள வாய்ப்புள்ளது. வேந்தன் இன்றி எதுவுமில்லை என்கிற காலத்தில், அரசு அமைப்பிற்கு முந்தைய இனக்குழுப்பண்பாடான ஆநிரைக்கவர்தலை வேந்தன் மேவுவதாகக் கொள்ளும் மரபு உருவாகியிருக்கலாம். அத்தகைய மாறுநிலைக்காலத்தின் கருத்தாக்கங்களைத் தொல்காப்பியப் பதிவுகள் கொண்டுள்ளன. வெட்சித்திணையும் அதன்துறைகளும் இனக்குழுச் சமூகத்தின் எச்சங்களையும், அச்சமூகத்தின் வீழ்ச்சியில் தோன்றிய அரச அமைப்பின் தோற்றத்தையும் ஒருசேர வெளிகாட்டுவனவாக இருப்பதை மார்க்சிய நோக்கில் இக்கட்டுரை ஆராய்ந்துரைந்துள்ளது.

**குறிச்சொற்கள்**

தொல்காப்பியம், வெட்சி, மார்க்சியம், இனக்குழுச் சமூகம், தனியுடைமைச் சமூகம், வேந்தர் சமூகம், பொருள் உற்பத்தி, தந்துநிறை, பாதீடு, கொடை.

**முன்னுரை**

தொல்காப்பியம் தமிழர்தம் வாழ்வியலை அறிந்துகொள்ளும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. தொல்காப்பியப் பதிவுகளைக் காண்கிறபோது, அவை இருவேறுபட்ட சமூகத்தின் பதிவுகளாக உள்ளன. தொல்காப்பியம் வெட்சித்திணையினை வேந்தர் அமைப்பின்பாற்பட்டதாக விளக்குகிறது. ஆனால் வெட்சித்திணையின் துறைகளைக் காண்கிறபோது, அவை இனக்குழுக்காலத்திய பண்பாடுகளையும் அது சிதைந்து உண்டான புதிய சமூகத்தின் மாற்றங்களையும் ஒருசேர பிரதிபலிப்பனவாக உள்ளன. இதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**தொல்காப்பியம் காட்டும் வெட்சி: இனக்குழுச் சமூகத்தின் எச்சம்**

தொல்காப்பியம் ஏழு வகையான புறத்திணைகளைக் குறிப்பிடுகிறது. அதில் முதலாவது வெட்சித்திணை ஆகும். அதனை ‘வெட்சி தானே குறிஞ்சியது புறனே யுட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே’ (தொல். பொருள். நூ. 56) என்கிறது தொல்காப்பியம். மேலும் வெட்சித்திணையானது வேற்றுப்புலத்தில் உள்ள ஆக்கூட்டங்களைக் கவர்ந்து தன்புலம் சேர்வதாகவும், அத்தொழில் வேந்தரால் ஏவப்படும் என்றும் குறிப்பிடுகிறது (மேலது, நூ. 57).

ஆரம்பத்தில் வேட்டைச்சமூகமாக இருந்த மனிதர்கள் பின்னர் கால்நடை வளர்ப்புச் சமூகத்தினராகப் படிப்படியாக மாற்றம் கண்டனர். வேட்டையாடுதலைவிட கால்நடை வளர்ப்புத் தொழில் சற்று இலகுவானதாக அமைந்தது. தற்போது தமக்குத்தேவையான உணவினை வேட்டைக்குச் செல்லாமலேயே வளர்ப்பு விலங்குகளின் இறைச்சி, அவற்றின் பால்படு பொருட்கள் ஆகியவற்றின் ஊடாகக் கால்நடை வளர்ப்புச் சமூகத்து மக்கள் பெற்றனர். வேட்டைச் சமூகம் உடைமையற்ற பொதுவுடைமைச் சமூகமாக இருந்தது. ஆனால் அதிலிருந்து பிரிந்த கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட காலகட்டங்கள்வரை குலத்தின் பொதுச்சொத்தாக இருந்த கால்நடைகள் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகப் படிப்படியாக வளர்ப்பவர்களின் தனியுடைமையாக மாறின.

தனியுடைமையின் தோற்றம் இனக்குழுச் சமூகத்தில் பல விரும்பத்தகாத மாற்றங்களைக் கொணர்ந்தது. உடைமை இருப்பவர்கள் உடைமை இல்லாதவர்களென ஒரே இனக்குழுவிற்குள் உருவாகிய வர்க்க ரீதியான பிரிவினைகள் அரசு முதலிய அதிகார அமைப்புகள் தோன்ற வழிவகுத்தன (ஃபிரடெரிக் எங்கெல்ஸ், 2011).வெட்சியானது செல்வம் மற்றும் உணவிற்கான பொருட்களை வழங்கும் ஆக்கூட்டங்களைக் கொள்ளையிடும், கால்நடை வளர்ப்புச்சமூகக் காலக்கட்டத்தில் நிகழ்ந்த பண்பாட்டு எச்சங்களைத் தன்னுள் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. ஒரு புலத்தைச் சார்ந்த ஒரு கூட்டம் அணிதிரண்டு மாற்றுப் புலத்தாரின் ஆக்கூட்டங்களைக் கவர்ந்து வருகின்றனர். இவற்றின் பொருளாதாரக் காரணிகள் ஆராயத்தக்கவை.

**வெட்சியும் அதன் துறைகளும்**

ஆக்கூட்டங்களைக் கவர்ந்து வருதலின் தொழில்முறை செயற்பாடுகள் பின்வருமாறு அமைவதாகத் தொல்காப்பியம் எடுத்துக்காட்டுகிறது.

"படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
வொற்றி னாகிய வேயே வேய்ப்புற
முற்றி னாகிய புறத்திறை முற்றிய
வூர்கொலை யாகோள் பூசன் மாற்றே
நோயின் றுய்த்த னுவலுழித் தோற்றந்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த வீரேழ் வகையிற் றாகும்." (தொல். பொருள். நூ. 58)

வெட்சித்திணையினைப் பதினான்கு துறைகளின் வழியாக விளக்குகிறது தொல்காப்பியம்.

**படையும் ஒற்றும் – அரச அமைப்பிற்கு முந்தைய நிலை**

மேற்கண்ட துறைகளில் வேந்தன் மேவியதைப்போன்ற குறிப்புகள் இல்லாததைக் காணமுடிகிறது. ஆனால் 'படை' என்கிற சொல்லாட்சியானது பயின்று வருவது சிந்தனைக்குரியது. அரசருக்கு உரியவற்றுள் படையினைத் தொல்காப்பியம் காட்டுகிறது (மேலது, நூ. 626). அதோடு 'ஒற்று' பற்றியும் வெட்சித்திணைக் காட்டுகிறது. இந்தப் 'படை' மற்றும் 'ஒற்று' ஆகியச் சொற்கள் முறையே ஓர் அரசு அமைப்பின் பகுதிகளைக் காட்டுவதாகத் தோன்றினாலும், அவை முழுமைப்பெற்ற

அமைப்பாகக் கருதுவதற்கு வாய்ப்பளிக்காமல், அவை அரசுக்கு முந்திய அமைப்பான இனக்குழு வாழ்வியலைக் காட்டுவதாக உள்ளன.

**தற்காலிகமான படை**

வெட்சியில் உள்ள ‘படை’ என்கிற சொல்லாட்சி பழைய மரபை புதிய அரசு அமைப்பில் உள்ள படையினைக் கொண்டு புரிந்துகொள்வதற்காகப் பயன்படுத்தி இருக்கலாம். அரசமைப்பில் உள்ள படையானது நன்கு ஒழுங்குப்படுத்தப்பட்ட படையாகவும் பயிற்சி அளிக்கப்பட்ட நிரந்தர அமைப்பாகவும் இருக்கும். இத்தகைய அமைப்பினை மூவேந்தர்கள், அதன் பின்னர் தோன்றிய பேரரசுகளான பல்லவர், பிற்காலச் சோழர்கள் காலத்தில் காணலாம். ஆனால் அரசிற்கு முந்தைய அமைப்புகளில் அவை நிரந்தரமான அமைப்புகளாக இல்லாமல் ஆபத்துக்காலங்களிலும் தேவையின் பொருட்டும் ஒன்று சேரும் படையாகவே இருந்தன. வெட்சியில் குறிப்பிடும் படையும்கூட அத்தகையதாக ஆநிரைகளைக் கவர்வதற்காக அச்சமயம் மட்டும் ஒன்றிணைந்த குழுவாகக் கொள்ளலாம். மேலும் 'ஒற்று' ஆகியவையும் அவ்வாறே வேற்றுப்புலத்தின் நிலமைகள் எவ்வாறு உள்ளன என்பதை அறிவதற்கு உருவாக்கப்பட்ட நிறுவனமயப்படுத்தப்படாத அமைப்பில் உருவானதாக இருக்கலாம்.

**விரிச்சிக்கேட்டல்:**

‘விரிச்சிக் கேட்டல்’ எனும் மரபு பறவைகளின் ஒலி, நற்சொற்கள், தாவரங்களின் மலர்ச்சி உள்ளிட்டவற்றால் தாம் கொள்ளும் நேர்மறை எண்ணங்களுக்கான நம்பிக்கை என்கிற இனக்குழுச் சமூகத்தின் மிக எளிமையான வழக்காறாக இருக்கிறது.

**வேற்றுப்புலமும் பகைப்புலமும்**

தொல்காப்பியம் ‘வேற்றுப்புலம்’ என்று குறிப்பிட உரையாசிரியர்கள் ‘பகைப்புலம்’ என அதனைச் சுட்டுகின்றனர் (ஆ. சிவலிங்கனார், 2015: 29). இது நிரந்தர அரசு அமைப்பின்பாற்பட்டு வேந்து வழியில் தன்புலம் அல்லாத வேற்றுப்புலங்கள் அனைத்தும் பகைப்புலங்களாகப் பார்க்கின்ற மரபால் உண்டானதாகக் கொள்ளலாம். ஆனால் அது வேற்றுப்புலம்தானே தவிர தனியுடைமைக்குப் பிந்தித் தோன்றிய பகைப்புலனாக இருக்க வாய்ப்பில்லை.

**ஊர்க்கொலை**

‘ஊர்க்கொலை’ - என்பது உரையாசிரியர்களால் ஆநிரை மீட்க வருகின்றோரை அழித்தல் அதாவது கொல்லுதல் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ஆனால்

எதிர்வருவாரைக் கொல்லும்போது அங்கு நிலமைகள் மிக மோசமானதாக மாறும். களவிற்குப் பதிலாகப் பெரும் சண்டைகள் மூளும். இனக்குழு ஒன்றிணைந்து தம்மவரை அழித்த மாற்றாரை அழிக்க நினைப்பர். எனில், இதனைக் கொலை என்று எண்ணுவதற்கு இடமில்லை. இதற்கு ஆதரவாகப் 'பூசல் மாற்று' என்பது உள்ளது.

**பூசல் மாற்று**

போர் என்ற சொல்லிற்குப் பதிலாகப் 'பூசல்' என்ற சொல் இடம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. அங்கு நடப்பது ஆநிரைகளைக் காப்பதற்காகவும் கவர்வதற்காகவும் இடையே நடக்கின்ற ஒரு எதிர்ச்செயலாக மட்டுமே கொள்ள முடிகிறது. "போர் இன்றி நிரை கொள்வதே நோக்காதலின், போர் என்னாது பூசல் எனப்பட்டது" என்கிற சோமசுந்தர பாரதியின் உரை கவனிக்கத்தக்கது (மேலது: 53). ஏற்கனவே எதிர்த்தவரைக் கொன்று அழித்திருந்தால் மீண்டும் எதிர்த்து வருவோரைக் கொன்று செல்லாமல் ஏன் சிறு பூசலாக அதனைக் காட்ட வேண்டும். உண்மையில் கொல்லுதல் என்பது ஒரு போர்த்தொழில். ஆனால் இங்குச் சுட்டப்பெறுவது சிறுவகையான பூசல். எனில் ஊர்க்கொலை என்பதில் வரும் ஊர் என்பதனை அவ் ஊரார் எனும் ஆகுப்பெயராகக் கொள்ளாமல், ஆகொள்வதற்குத் தடையாக இருக்கும் ஊர் அரண்களை அழித்தல் எனப்பொருள் கொள்வது பொருந்தும். அல்லது உணவிற்காக மனிதர்கள் மனிதர்களையே கொன்றழிக்கும் வேட்டைச் சமூக மனநிலையிலிருந்து கால்நடை வளர்ப்புச் சமூகம் ஊர் மற்றும் அம்மக்களைக் கொன்றழிக்கும் வேலையினைச் செய்யாமல் அவர்களை அடிமையாகக் கொணர்ந்து உற்பத்தியினைப் பெருக்கவே செய்வர்.

**தந்துநிறை**

வேந்துவிடு தொழிலாக இருந்திருந்தால் கவர்ந்த ஆநிரைகளை அவர்கள் அரசவையில் நிறுத்தி இருப்பர். ஆனால், வெட்சிக்குழுவோ ஊர்மன்றத்தில் நிறுத்துவதைத் 'தந்துநிறை' எனும் துறை உணர்த்துகிறது. இது வேந்தனின் ஆளுகை அற்ற இனக்குழு நிலமையைக் காட்டுகிறது.

**பாதீடு**

வேந்தன்தான் படைவீரர்களுக்கு உரியவற்றைப் பகிர்ந்தளித்துப் பின்னர் உபரியின் பெரும்பகுதியினைத் தம்வசம் வைத்துக்கொள்வான். அதுவே அரசின் நிலைப்பேற்றுக்கு உகந்தது. இங்கோ முற்றிலும் தாம் கொணர்ந்த அனைத்து ஆநிரைகளையும் கொணர்ந்தவர்களே தம் தகுதிக்கேற்பப் பங்கிட்டுக்கொள்வது இனக்குழு மரபே அன்றி வேந்துவிடு தொழில் மரபாக இல்லை. இதனைத்

“தொல்காப்பியம் ‘பாதீடு’ என்றொரு துறையைக் குறிக்கிறது. (வெட்சித் திணையில் ஒரு துறை) போர் வீரர், தாம் கவர்ந்த நிறையைத் தமக்குள் பங்கிடுவதைக் கூறும் துறை இது என்று இலக்கணக்காரர் விளக்கிக் கூறுவர். பாதீடு என்றால் பங்கீடுகை என்பது பொருள். தனிச்சொத்துரிமை தலைதூக்கும் முன் பகுத்தளித்தலே நியதியாயிருந்தது” – என எடுத்துக்காட்டுகிறார் க. கைலாசபதி (2009: 97 -98)

‘பாதீடு’ என்பது பழைய சமூகத்தின் எச்சமாக உள்ளது. பண்டைய இனக்குழுக்களில் நிகழ்ந்த பங்கிடுகைக்கான காரணம் “உணவைப் பாதுகாக்க முடியாவிட்டால், அதை விரைவில் உட்கொள்ள வேண்டும். அதாவது மிகுந்துள்ளதைப் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டும். இல்லையெனில் பெரும்பாலான மக்கள் பட்டினி கிடப்பார்கள். ஆனால், பல மிருக வகைகளும்கூட தங்களிடம் மிகுந்துள்ள உணவைப் பங்கிட்டுக்கொள்கின்றன. முற்றிலும் பற்றாக்குறை நிலையிலிருந்து முன்னேறிவிட்ட பூர்வகுடிக் கூட்டங்களில் உணவை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது சமூகத்தில் ஒரு கடமையாயிற்று. அதாவது முக்கிய நாட்களில் விருந்து அளிப்பதுபோல் சேகரிக்கப்பட்ட உணவில் ஒவ்வொருவருக்கும் சம உரிமை இருந்தது என்பது இதன் பொருளல்ல. இரண்டாவதாக, இவ்வாறு உணவு சேகரிப்பவர்கள் தங்களுடைய தேவைக்கு அதிகமாகப் பிராணிகளைக் கொல்வதோ உணவு திரட்டுவதோ அபூர்வம். பேராசை காரணமாக அதிகமாக எதையும் சேமித்து வைத்துக்கொள்வதோ பொழுதுபோக்கிற்காக வேட்டையாடுவதோ இல்லை. அப்படிச் செய்திருந்தால் இறைச்சி அழுகி வீணாகியிருக்கும்” என எடுத்துக்காட்டுகிறார் டி.டி. கோசாம்பி (2017: 53).

ஆநிரைகளை வேட்டைப்பொருளை விட நீண்ட காலத்திற்குப் பயன்படுத்த முடியும் என்கிற எளிய உண்மையின் மூலம் ஆநிரைகள் உடைமைகளாகும் நிலைக்கு உயர்ந்தன. பாதீடு என்பது பங்கிட்டுக்கொள்ளுதல் என்கிற நிலையில் இருந்து மாறி தகுதிக்கு ஏற்ப பங்கிட்டுக்கொள்ளும் மரபாக மாறியிருப்பது உற்பத்திமுறையின் வளர்ச்சியினால் ஏற்பட்ட மாற்றத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. 'ஆ' கவர்வதற்கு உதவிய 'ஒற்றர்', 'விரிச்சி நின்றோர்', 'கலைஞர்கள்' ஆகியோருக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப ஆநிரைகள் வெட்சி மறவர்களால் பங்கிடப்படுகின்றன. அதோடு ஆநிரைக் கவர்தலில் நேரடியாக ஈடுபட்டவர்களும் தமது ஆள்வினையின் தன்மைக்கு

ஏற்ப ஆநிரைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதை இத்துறை வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

“பாணர்மரபில் கூறப்பட்ட குழுச் சமூகங்களின் உண்டாட்டு, பாதீடு, புராதனமான குழுச் செயற்பாடுகளாகும். புலவர் மரபு, மன்னர் – வேந்தர்க்குக் கூறிய உண்டாட்டு, பாதீடு, வேளாண் உடைமைச் சமூகத்தின் செயல்பாடுகாளாகும். முன்னது சமமான பகிர்வு, நுகர்ச்சிக்குரியது செல்வமாகாது. பின்னர் வரிசையறிந்து வழங்கப்படுவது உடைமைக்குரியது ஆள்வினையின் பாற்பட்டது.” (ராஜ் கௌதமன், 2018: 48) தகுதிக்கு ஏற்ப என்பதில் ஆநிரைக் கவர்தலில் ஒருவர் ஆற்றிய செயற்பாட்டின் தன்மையினைப் பொருத்து அவர் அதிக மற்றும் குறைந்த அளவிலானதைப் பெறுகிறார்.

இந்த அளவுகள் தனியுடைமையின் பெருக்கம் மற்றும் ஆநிரைக்கவர்தலில் பங்குப்பெறாதவர்களை இரவலர்களாக மாற்றும் சமூக நிலமைகளை உருவாக்கியிருப்பதை (பாதீடு) அவதானிக்கலாம். ஒரு சமூகம் என்பது குழந்தைகள், முதியவர்கள், பெண்கள், ஆண்கள், உடல் ஊனமுற்றோர், கலைஞர்கள் எனப் பலதரப்பட்ட மனிதர்களைக் கொண்டு இயங்குகிறது. இதில் அனைவரும் உற்பத்தியில் பங்குப்பெறுவது என்பது சாத்தியமற்றதாக இருக்கிறது. குறிப்பாய் தந்தைவழிச் சமூகத்தில் ஆண்கள் மட்டுமே ஆநிரை கவர்தல், போர்ச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் வீட்டுவேலைகளைப் பார்த்துக்கொள்வதும் ஆண்கள் புறவேலைகளில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுவதுமான உழைப்புப்பிரிவினை உருவாகியிருக்கிறது (ஃபிரடெரிக் எங்கெல்ஸ், 2011: 101). அதோடு பொருள்உற்பத்தியில் பங்குப்பெற இயலாதவர்களாகக் குழந்தைகள், முதியவர்கள், ஊனமுற்றோர், கலைஞர்கள் உள்ளனர். இவர்களைப் புரப்பதுவும் குழுவின் கடைமையாகிறது. இவர்களைத்தவிர பல்வேறு காரணங்களால் பொருள்உற்பத்தியில் ஈடுபடாதவர்கள் இரவலர்களாக மாறுவதும் அக்குழுவில் நடக்கிறது.

**கொடை**

பொருள்உற்பத்தியில் ஈடுபடாதவர்கள் பொருள்உற்பத்தியில் ஈடுபடுபவர்களை நம்பி வாழ்கின்றனர். இந்நிலையில் பாதீடு என்பதன் வழியாகத் தம்மை நம்பியிருப்பவர்களைப் பாதுகாக்கும் செயலானது நடைபெறுகிறது. அதே வேளையில் ஆநிரைக் கவர்தலில் பங்குப்பெற்று தம் திறமைகளின் வழியாகப் பெறுகின்ற அளவுகள் மாறுபடுவதனால் ஒருவரிடம் அளவுக்குமீறி செல்வம்

சேர்வதும், மற்றொருவரிடம் தேவைக்கும் குறைவான செல்வம் மட்டுமே கிடைப்பதுவுமான செயற்பாடுகள் நடந்தேறுகின்றன. இந்நிலையில்தான் 'கொடை' உள்ளிட்ட சமூகச்செயற்பாடுகள் தோற்றம் கொள்கின்றன.

'கொடை' என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. 'பெருமிதம் தருவதாகக் கொடையினைத் தொல்காப்பியம் கூறுகிறது.' (தொல். பொருள். நூ. 257) இனக்குழுவில் கொடைக்கு இடமில்லை. அதனால் இரவலர்கள் என்று யாரும் இருக்க வாய்ப்பில்லை. இது வேட்டைச் சமூகத்தின் நிலை. உபரி என்று எதுவும் இல்லாத காலத்தில் கொடை வழங்குவதற்கான வாய்ப்போ அல்லது ஒருவர் இரவலராவதற்கான வாய்ப்போ வெகு குறைவு. ஆனால் வெட்சியானது வேட்டைச் சமூகத்தில் இருந்து கால்நடை வளர்ப்புச் சமூகமாக மாறியதன் பின்னணியில் உள்ளது. அங்குத் தனியுடைமை மெல்ல கால்நடைகளின் வழியாக வளர்ந்து வந்துள்ளது. பாதீடும்கூட தகுதி என்கிற அடிப்படைகளைக் கொண்டுள்ளமையால் தனியுடைமை சிலர் கைகளில் அதிகமாகக் குவிய வாய்ப்பேற்படுகின்றன. ஆனாலும் இங்கு அது அவர் உழைத்ததன் பயனாகவே நடக்கிறது. உழைக்காமலே உபரிகளைத் தமது அதிகாரத்தினால் சுரண்டுகின்ற அரசு அமைப்பு உருவாகவில்லை. தம் நிலைக்கு ஏற்ப உபரிகளை அச்சமூகத்தில் உள்ள கலைஞர்களுக்கு வழங்குவதைக் கொடையாகக் கொள்ளமுடிகிறது. அவர்கள் உழைப்பிலிருந்து விடுபட்டவர்கள். அவர்களைப்பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களாகக் குடித்தலைமை இருந்தது.

மேற்கண்டவற்றிலிருந்து வெட்சியானது வேந்தர்களுக்கும் முற்பட்ட இனக்குழுச் சமூகத்தின் பண்பாடு என்பதனையே அதன் துறைகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றிலிருந்து வெட்சியானது இனக்குழுச் சமூகத்தின் எச்சமாக இருப்பதனை அறியமுடிகிறது.

**தொகுப்புரை**

- ❖ வெட்சியினைத் தொல்காப்பியம் வேந்தர் அமைப்பின்பாற்பட்டதாகக் காட்டுகிறது. ஆனால், வெட்சித்திணையின் துறைகளில் வேந்தன் பற்றிய குறிப்புகள் எதுவுமில்லை.
- ❖ வெட்சித்திணையின் துறைகளை ஆராய்கின்றபோது அவை இனக்குழுச் சமூகத்தின் பண்பாட்டு எச்சங்களைத் தன்னுள் கொண்டுள்ளனவாக உள்ளன.

- ❖ படை, ஒற்று ஆகியன நிறுவனமயப்படாத காலத்திய அமைப்புகளாகக் கொள்ளமுடிகிறது. பெரும்போர் என்றில்லாமல் பூசல் என்றதன்வழி இனக்குழுக்காலத்திய மரபினைப் பிரதிநிதித்துவம் செய்வதாக உள்ளன.
- ❖ வெட்சித்திணையின் துறைகளான 'தந்துநிறை', 'பாதீடு' போன்றவை பொதுவுடைமைச் சமூகத்தின் பகிர்ந்தளித்தல் அறத்தின் எச்சங்களாக உள்ளன.
- ❖ 'கொடை' எனும் துறை இனக்குழுச் சிதைந்து உண்டான அரசு சமூகத்தில் தோன்றிய ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்வதற்காக வேந்தர் சமூகத்தில் தோன்றிய உபரிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்கிற அறக்குரலாக உள்ளது.
- ❖ இவற்றின்வழியாகத் தொல்காப்பியம் காட்டும் வெட்சியானது இனக்குழுச்சமூகத்தின் எச்சங்களையும், அச்சமூகம் சிதைந்து தோன்றிய அரசு அமைப்பின் தோற்ற காலத்தினையும் ஒருசேர பிரதிபலிப்பதாக உள்ளதை இக்கட்டுரை ஆராய்ந்துரைத்துள்ளது.

**துணைநூற்பட்டியல்:**


- எங்கெல்ஸ் ஃபிரடெரிக், (மூ. ஆ.), குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, இரண்டாம் பதிப்பு - 2011
- ❖ கணேசையர் (பதிப்பு), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பாகம்), முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், இலங்கை, 1948.
- ❖ கைலாசபதி, க., சமூகவியலும் இலக்கியமும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, மறுபதிப்பு - 2009.
- ❖ கோசாம்பி, டி. டி., (மூ. ஆ.), நாராயணன், ஆர். எஸ், (மொ. பெ.), பண்டைய இந்தியா பண்பாடும் நாகரிகமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு - 2017.
- ❖ சிவலிங்கனார், ஆ., (தொ. ஆ.), தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உ. வ.), புறத்திணையியல் பகுதி -1, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மீள்பதிப்பு - 2015.
- ❖ ராஜ் கௌதமன், ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2018.